மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்திலே தோல் பொருள்களுக்கான தனி தொழிற்பேட்டை சிறப்பாக நடந்து வருகிறது. அங்கே அரசினுடைய 24 தொழிற்கூடங்களும், சிட்கோ கட்டித் தந்த 10 தொழிற் கூடங்களும், ஆக 34 தொழிற் கூடங்கள் அங்கே இருக்கின்றன.

அதேபோல டான்சியினுடைய நிர்வாகத்திலிருந்த பெரம்பூர், மாதவரம், பல்லாவரம் மற்றும் விண்ணமங்கலம் ஆகிய 4 தொழிற்கூடங்களை டால்கோவுக்கு மாற்றியிருக்கிறோம். அப்படி மாற்றப்பட்ட தோல் தொழிற்கூடங்களில் எந்தவிதமான பொருள்களும் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனாலும்கூட வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் டான்சி நிர்வாகத்தில் இருந்த தொழிற் கூடத்திலிருந்து தோல் பொருள்களை 1983–84 இல் கனடா, இத்தாலி, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும், 1984–85 இல் இத்தாலி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவிற்கும், 1985–86 இல் தென் கொரியா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் சுமார் 1 கோடி 10 லட்சம் ரூபாய் அளவிற்குத் தோல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழிற்கூடங்களினால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அது மட்டும் அல்லாமல் இப்போது புதியதாக தோல் வளர்ச்சி மையம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறோம். அங்கு என்னென்ன பொருள்களைத் தயாரிக்கிறார்கள். இப்போது தோல் வளர்ச்சி மையம் இருப்பதால் லாபம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா அல்லது நட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா? எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டால்கோ பொறுத்த மட்டில், இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிறுவனம். ஆரம்பத்திலே அது நட்டத்திலே இயங்கினாலும் கூட எதிர்காலத்தில் ஓரளவிற்கு லாபத்தை ஈட்டும் என்று எதிர் பார்க்கப் பெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பழனி தொகுதியில் தொழிற்கூடங்கள்

736—(*வினா எண் 7829)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனித் தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளதால் 15 நபர்களுக்குக் குறையாமல் தொழில் நடத்த முன் வருபவர்களுக்குத் தொழில்கூடங்களை அரசே அமைத்துக் கொடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

1986 மே 10]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) தொழில் நடத்த தகுதிவாய்ந்த தொழில் முனைவோர்கள் முன் வந்தால் சிட்கோ நிறுவனம் தொழில் கூடங்களை கட்டிக் கொடுக்க முன் வரும்.

(ஆ) 15 தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் இப் பகுதியில் வங்கி அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தின் நிதி உதவியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட தொழில் திட் டங்களுடன் விண்ணப்பித்தால் நிச்சயமாக தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம் பற்றி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) பரிசீலனை செய்து நடவடிக்கை மேற் கொள்ளும்.

### அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடி

737—(*வினா எண் 5140)—திரு. அ. மலர்மன்னன்: மாண்பு மிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள அமராவதி சிறப்பு அங்காடி கடந்த சில ஆண்டு காலமாக நட்டத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) நட்டத்தில் இயங்கிவரும் இப் பண்டகசாலையை சீரமைக்க வியாபார எல்லைகள் சீரமைத்தல், சரக்கு குறைவை வசூலித்தல், பழைய சரக்குகளைத் துரிதமாக விற்றல், புதிய மூன்று கிளைகளைத்திறந்து கட்டுப்பாடு அல்லாதபொருட்களின் விற்பனையை அதிகரித்து வியாபாரத்தைப் பெருக்குதல், சிப் பந்தி, சாதல்வார், வட்டி செலவினங்களைக் குறைத்து சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அமராவதி சிறப்பு அங்காடி நட்டத்தில் நடப்பதாக ஒத்துக் கொண்டு, அதை எப்படி எல்லாம் சீர்செய்து குறைபாடுகளைக் களைய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புதிய தாக கிளைகள் திறக்க இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கிளைகளின் மூலமாகத்தான் நட்டமே